# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 8 ஹிஜ்ரி 1429 ரமலான் ஆகஸ்ட் 2009

இலவசம்

## புனித ரமலான் நோன்பிருப்போம்!

## ஈகைத் திருநாளை வரவேற்போம்!

## எல்லோர்க்கும் இனிய நல்வாழ்த்து!



# இஸ்லாமிய மையம் திறப்பு விழா

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் இஸ்லாமிய மையத்தை அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் திறந்து வைத்தார்.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸின் 40 ஆண்டு நிறைவு விழா இனிய சாதனைப் பதிவு. பிராடல் சாலையில் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ள சிங்கப்பூர் இஸ்லாமிய மையம் நாற்பது ஆண்டு நிறைவுக்குச் சீரும் சிறப்பும் சேர்க்கிறது.

முயிஸ் 1968ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. அதன் சமூக, சமய நற்பணிச் சாதனைகளை சிங்கப்பூரர்கள் நன்கறிவர்.

முன்னைய முயிஸ் அலுவலகமும் 1977ல் கட்டப்பட்ட முஹாஜிரின் பள்ளிவாசலும் இயங்கி வந்த அதே இடத்தில்தான் புதிய மையம் நிறுவப்பட்டுள்ளது. புதிய வளாகம் 16.1.2009ல் திறப்பு விழா கண்டது. 11 மாடிகளைக் கொண்ட முயிஸ் அலுவலகம், மூன்று மாடிகளைக் கொண்ட முஹாஜிரின் பள்ளிவாசல், அல் இர்ஷியாத் இஸ்லாமியப் பள்ளி ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன.

முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் சிங்கப்பூர் இஸ்லாமிய மையத்தை 11.7.2009 அன்று திறந்து வைத்தார்.

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம், இஸ்லாம் எடுத்துரைக்கும் நன்னெறிக் கோட்பாடு களின்படி முன்னேற்றப் பாதையில் முன்னணி அடையாளத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது. அதே தருணத்தில் பல இனம், சமூகம், சமயங்களைக் கொண்ட ஒட்டு மொத்த சிங்கப்பூர் குடியரசு மற்றும் இன்றைய நவீன உலகின் வெற்றிக்குப் பங்களிப்பதில் நமது சமூகம் தன்னம்பிக்கையுடன் திகழ்கிறது என்று சுற்றுப்புற நீர்வள அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

நவீன வடிவமைப்பும் வசதிகளும் நிறைந்த இப் பள்ளிவாசலில், பள்ளிவாசல் கட்டுமான நிதித் திட்டம் குறித்த கண்காட்சிக் கூடத்தை முன்னதாக (10.7.2009) அவர் திறந்து வைத்தார்.

## வசதிகள்

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தினரின் தேவைகள், மாறிவரும் சமூகச் சூழல்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப பல்வகை வசதிகளையும் இந்த மையம் பெற்றுள்ளது.

11 மாடி முயிஸ் கட்டடத்தில் ஐந்து லட்சம் சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமூக, சமயத் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிர்வாக, அலுவலக முனையங்கள், செயலகங்கள் உள்ளன. ஷரியா நீதிமன்றம், முஸ்லிம் திருமண மன்றம், இஸ்லாமிய ஆய்வு நூலகம் ஆகியவை அவற்றுள் அடங்கும். குழந்தைகளுக்குரிய தனி இடவசதியும் உள்ளது. சுமார் 300 ஊழியர்கள் முயிஸில் பணிபுரிகின்றனர்.

எட்டு மாடிகளைக் கொண்ட அல் இர்ஷியாத் இஸ்லாமியப் பள்ளி 16 மில்லியன் வெள்ளி செலவில் கட்டப்பட்டது. சுமார் 900 தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இதில் சமயக் கல்வி பயில்கின்றனர்.

இந்த மதரஸாவிலுள்ள 32 வகுப்பறைகளில் இணைய வசதியும், ஒளியூட்டும் கருவியும் உள்ளன. அறிவியல் கூடமும் நூலகமும் உள்ளன. கட்டடங்களின் அடித்தளத்தில் கார் நிறுத்தும் இட வசதி உள்ளது.

இன்றைய நவீன கால கட்டத்திற்கு ஏற்ப இஸ்லாமிய சமூகம் ஒத்து, ஒருங்கிணைந்து செயல்படுவதை இந்த விழா நிகழ்வுகள் விளக்குவதாக அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

“புதிய இஸ்லாமிய மையம் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் அடையாளச் சின்னமாக உருவாகும்” என்று பிரதமர் லீ சியென் லூங் கூறினார்.

16 சங்கங்கள் அங்கம் வகிக்கும் இந்திய முஸ்லிம் பேரவை, சிங்கப்பூர் இஸ்லாமிய மையத் திறப்பு விழாவை வரவேற்று வாழ்த்துச் செய்தி வழங்கிச் சிறப்பித்தது. மினி என்வைரன்மென்ட் சர்வீஸஸ் நிறுவனமும் நல்வாழ்த்துச் செய்தியை வெளியிட்டது.

# முயிஸ் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழா




சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பிரதமர் லீ பாராட்டு.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். அதனால் முஸ்லிம் சமூகம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறது. பிற சமூகங்களுடன் ஒருங்கிணைந்து இயங்கி வருகிறது.

வெளிநாட்டு வருகையாளர்கள் வியக்கும் அளவுக்கு பிராடல் சாலையில் அமைந்துள்ள புதிய இஸ்லாமிய வளாகத்தில் 11.7.2009 இரவு நடைபெற்ற முயிஸ் நாற்பதாண்டு நிறைவு விழா விருந்தில் பிரதமர் லீ சியென் லூங் இந்தப் பாராட்டுரையை வழங்கினார்.

தன்னம்பிக்கையுடைய முன்னேறும் சமூகமாக தனித்தன்மை வாய்ந்த அடையாளத்தை சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார். அதன் பன்முனை வெற்றிகளைப் பட்டியலிட்ட பிரதமர், குறிப்பாக மார்க்கக் கல்வி, பள்ளிவாசல் கட்டுமானம், ஹோட்டா-உறுப்பு மாற்றுச் சட்டம், தீவிரவாத ஒழிப்பு ஆகிய நான்கு துறைகளை எடுத்துரைத்தார்.

### சமயக் கல்வி

முஸ்லிம் சிறார்களுக்கும் இளையருக்கும் பயனளிக்கும் பல கல்வித் திட்டங்களை முயிஸ் செயல்படுத்தியிருக்கிறது. அதனால் இதுவரை ஆறாயிரம் முஸ்லிம் சிறார்கள் பயனடைந்து உள்ளனர். இந்தக் கல்வித் திட்டத்தை எல்லா பள்ளிவாசல்களிலும் அடுத்த ஆண்டுக்குள் செயல்படுத்த முயிஸ் கருதியுள்ளது.

### பள்ளிவாசல் கட்டுமானம்

குடியரசில் பள்ளிவாசல்களைக் கட்டும் பணியில் முயிஸ் முனைப்பாக ஈடுபட்டு வருவதை பிரதமர் சுட்டிக்காட்டினார். முன்னைய பிரதமரான மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ தெரிவித்த யோசனையின்படி 1975ல் பள்ளிவாசல் கட்டுமான நிதி தொடங்கப்பட்டது.

அந்த நிதியின் மூலம் 100 மில்லியன் வெள்ளிக்கு மேற்பட்ட செலவில் 23 பள்ளிவாசல் கட்டப்பட்டன. அந்தத் தொகை அனைத்தும் நமது சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தினால் திரட்டப்பட்டது என்பது பெருமிதம் அளிப்பதாக பிரதமர் கூறினார்.

### உறுப்பு மாற்றுச் சட்டம்

ஹோட்டா உறுப்பு மாற்றுச் சட்டத்தை சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்ளச் செய்வதில் முயிஸ் ஆற்றிய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என திரு லீ தெரிவித்தார். இச்சட்டம் முஸ்லிம்கள் உறுப்பு தானம் செய்வதற்குத் தொடக்கத்தில் விலக்களித்திருந்தது.

எனினும் பிறர் உயிரைப் காப்பது இஸ்லாமிய தார்மீகக் கோட்பாடு என்பதால் ஹோட்டா சட்டத்தை முஸ்லிம் அமைப்புகள் மறுஆய்வு செய்தன. விரிவான விவாதங்களுக்குப் பிறகு தலைமை முஃப்தியும் ஃபத்வா குழுவினரும் அதற்கு அதிகாரபூர்வ ஒப்புதல் வழங்கினர்.

ஹோட்டா சட்டத்தில் சிங்கப்பூர் முஸ்லிம்கள் இடம் பெற்றிருப்பது நமது சமூக முன்னேற்றத்தில் ஒரு முக்கிய மைல் கல் என பிரதமர் மனநிறைவு தெரிவித்தார்.

சிறுநீரகங்கள், இதயம், கல்லீரல், விழித்திரை ஆகியவற்றை, உயிரிழக்கும் தருணத்தில் சிங்கப்பூரர்கள் தானமாக வழங்க அனுமதிக்கும் சட்டமே ஹோட்டா (HOTA) எனப்படும் உறுப்பு மாற்றுச் சட்டம். 1988 ஜனவரியில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் உறுப்பு தானம் செய்யலாம், அதற்கு எவ்விதத்தடையும் இல்லை என முயிஸ் ஏற்கனவே அறிவித்தது. ஹோட்டா சட்டத்தின் தொடர்பில் சுகாதார அமைச்சுடன் ஒத்துழைக்க அது உறுதி தெரிவித்தது. உறுப்பு தானம் குறித்த இஸ்லாமியக் கோட்பாடுகளை விளக்கும் கையேட்டையும் அது வெளியிட்டது.

ஹோட்டா சட்டத்தில் முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்க சமூக முன்னேற்றம் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அப்போது கருத்துரைத்தார்.

## தீவிரவாத ஒழிப்பு

தீவிரவாதத்திற்கு எதிராக முயிஸ் எடுத்த உறுதியான நிலையையும் நடவடிக்கைகளையும் பிரதமர் தமது உரையில் எடுத்துரைத்தார்.

ஜமா இஸ்லாமியா கைதிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்குமான சமய மறுவாழ்வுத் திட்டத்தை முயிஸ் ஆதரித்ததை யும், சிங்கப்பூர் முஸ்லிம்களும் இளையர்களும் வெளிநாடுகளில் தீவிர சித்தாந்தங்களைப் பயில்வதிலிருந்து தடுத்ததையும் அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய முயற்சிகள் சிங்கப்பூரின் பல இன, சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்தி உள்ளன என்றார் திரு லீ.

## பங்களிப்பு

முஸ்லிம் சமூகமும் சமயத் தலைவர்களும் சிங்கப்பூர் குடியரசுக்குக் குறிப்பிடத் தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர் எனப் பாராட்டினார் பிரதமர்.

சிங்கப்பூர் முஸ்லிம்களின் நம்பிக்கையைப் பெறுவதில் முயிஸ் மேற்கொண்ட நன் முயற்சிகளையும் கடின உழைப்பையும் அவர் புகழ்ந்தார். அவர்களின் சமயத் தேவைகளைக் கவனித்து நிறைவேற்றும் முயிஸின் கடமைப் பாங்கு சிறப்புக்குரியது என்றார் திரு லீ.

முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், தலைமை முஃப்தி சையது ஈஸா சமைத், மற்ற சமூகத் தலைவர்கள் உள்ளிட்ட 400க்கு மேற்பட்டோர் முயிஸ் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழா விருந்தில் கலந்து கொண்டனர்.

பிரதமரின் உரையை பிரமுகர்கள் பெரிதும் பாராட்டினர். முயிஸ் ஆற்றிவரும் அரும்பணி அரியது, அளப்பரியது என்று கருத்துரைத்தார் தொழிலதிபர் அப்துல் ஜலீல். சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் மேம்பாட்டுக் கும் ஒருங்கிணைப்புக்கும் முயிஸ் மகத்தான சேவையாற்றி வருகிறது என்றார் மினி என்வைரன்மென்ட் சர்வீஸஸ் நிறுவன இயக்குநருமான ஜலீல் PBM.

---

# நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகர் மௌலிது அரங்கில் ரங்கூன் ஷாஹுல் ஹமீது

ஹஜ்ஜா பாத்திமா பள்ளிவாசலில் 21.6.2009 முற்பகலில் நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகர் மௌலிது மஜ்லிஸ் நிகழ்ச்சி.

அந்த அணியில் மனம் உருக மௌலிது ஓதிக் கொண்டிருந்தார் மற்றொரு ஷாஹுல் ஹமீது. பர்மா-மியன்மார் தலைநகர் ரங்கூனிலிருந்து முதல் முறையாக சிங்கப்பூருக்கு வந்திருந்தார். வயது 90. அங்குள்ள சோலியா பள்ளியில் தலைமை ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்று ரங்கூன் நகரிலேயே வாழ்பவர். தாய்மொழியான தமிழிலும் பட்டக் கல்வி பயின்றதால் ஆங்கிலத்திலும், வாழும் மண்ணின் பர்மிய மொழியிலும், பாலர் பருவத்திலேயே ஓதியுணர்ந்த அரபு மொழியிலும் வல்லவரான இந்த ஷாஹுல் ஹமீது அவர்களை அறிந்தவர்கள் அந்த மஜ்லிஸில் ஓரிருவர் மட்டுமே! அவரை மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

ஷாஹுல் ஹமீது நாகூரி அவர்களின் மௌலிது நிறைவு பெற்றதும் ஒரு சொற்பொழிவு. மன அமைதியும் ஆரோக்கியமும் எனும் தலைப்பில் டாக்டர் ஹிமானா சையத் உரையாற்றினார். அடுத்து அரங்கில் நிரம்பியிருந்தோர் எதிர்பார்த்திராத மற்றொரு இனிய நிகழ்ச்சி.

இந்த அரங்கில் மௌலிது ஓதியவர்களில் ஆக மூத்தவருக்கு இப்போது பாராட்டு அறிமுக நிகழ்ச்சி என்ற அறிவிப்புடன் இருக்கையில் அமர்த்தப் பட்டார் ரங்கூன் ஷாஹுல் ஹமீது.

“இவர் தான் மூத்த தலைமுறை வாசகர்கள் நன்கறிந்த எழுத்தாளர் ஷாஹா” என்று ஜஹாங்கீர் அறிமுக உரையைத் தொடங்கியதும் அரங்கில் உற்சாகப் பெருக்கு.

இன்ப வேதனை நாவலை எழுதிய ஷாஹாவா? பாசக்கடலைப் படைத்த எழுத்தாளரா? அன்னை பூமியை வரைந்த ஷாஹாவைப் பார்க்கும் அரிய வாய்ப்பல்லவா இது என்று பலரிடையே ஆர்வத் துடிப்பு.

ஷாஹா-ஷாஹுல் ஹமீது 1919-ல் இராமநாதபுர மாவட்டம் சித்தார்க்கோட்டையில் செல்வந்தர் முகம்மது களஞ்சியம் மரைக்காயரின் புதல்வராகப் பிறந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டம் பெற்று ரங்கூன் சென்ற அவர், 1949 முதல் எழுத்துத் துறையில் ஈடுபட்டார். இவருடைய சிறுகதைகள் இந்தி, பர்மிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

மியன்மாரிலிருந்து சிங்கப்பூருக்கு வந்து நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகர் மௌலிது அரங்கில் ஓதிச் சிறப்பிக்கும் அரிய வாய்ப்பைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று மனம் நெகிழ்ந்து கூறினார் ரங்கூன் ஆசான் ஷாஹுல் ஹமீது.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் சார்பில் எழுத்தாளர் ஷாஹா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டது. அவரைச் சந்திக்காமலேயே அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆத்மார்த்த சகோதரப் பாசப் பிணைப்பை வளர்த்துக் கொண்டுள்ள ஜே.எம்.சாலி சங்கத்தின் பொற்கிழியை அணிவித்தார்.

ஷாஹா சுருக்கமாக உரையாற்றினார். இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதரை வாழ்த்தும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் விருத்தப் பாடலுடன் உரையைத் தொடர்ந்தார்:

எல்லா வஸ்தினும் பாத்தினாகி
    ஏகமா யெங்கும் லாஹிராகும்
அல்லா முல்குயூ பவனுக்காகும்
    அனேகப் புகழ்ச்சியும் வகை தனாவும்
சொல்லால் ஸலவாத்தும் சொற்சலாமும்
    துய்ய றசூலுல்லா(ஹ்) மீதிலாகும்
நல்லா றால்மீதும் ஸஹ்புமீதும்
    நாடோ றும் சொரி வா(ய்) இலாஹி



அரபுச் சொற்கள் கலந்த பாடலுக்கு அர்த்தம் கூறி ஆன்மீக நோக்கில் விளக்கம் தந்தார்.

ஜனாப் மைதீன் முதலான மூத்த தலைமுறை வாசகர்கள் ஷாஹா அவர்களை ஆரத் தழுவி அன்பைப் பகிர்ந்து கொண்டு ஆசிபெற்றனர். கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்புப் பணிகளிலும் முனைப்பாக ஈடுபட்டு வந்துள்ளார் ஷாஹா. முப்பது ஆண்டுகளுக்கு முன் தமது பிள்ளைகளுக்கு மார்க்கக் கடமைகளை எடுத்துரைக்கும் கவிதைகளை வரைந்தார். ஈமானின் ஃபர்ளுகள் எனும் கவிதை ஷாஹுல் ஹமீது நாயகர் மௌலிது அரங்கில் நிறைந்திருந்தோருக்கு வழங்கப்பட்டது.

ஈமான் பொருளைக் கூறிடுவேன்
    இதமாய் அதனைக் கேட்டிடுவீர்
ஈமான் பொருளாம் நம்பிக்கை
    என்று மனத்தில் வைத்திடுவீர்!

ஆறு கிளைகள் அதற்குண்டு
    அடுக்கடுக்காகச் சொல்லுகிறேன்
அதையும் மனத்தில் அன்போடு
    அடக்கி வைப்பீர் மானிடரே!

இந்தத் தொடக்கத்துடன் ஃபர்ளு கடமைகளை நீண்ட பாடலில் அவர் விவரித்துள்ளார்.

வளமும் வனப்பும் நிறைந்த பல சமய, கலாசார நல்லிணக்கம் நிறைந்த சிங்கப்பூரின் சிறப்புகளை வர்ணிக்க வார்த்தை இல்லை என்று மகிழ்ச்சி தெரிவித்தார் ரங்கூன் ஷாஹா.

# மாண்புமிகு நோன்பே வருக!

ரமலானில் நோன்பிருங்கள்! இஸ்லாத்தின் ஓர் அடித்தளத் தூண் அது என்று நபிகள் நாயகம்(ஸல்) மொழிந்தார்கள்.

புனித ரமலான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை அல்லவா? அந்தக் கடமையின் மாண்பையும் அதன் நெறிமுறைகளையும் திருக்குர்ஆனில் அருளி இருக்கிறான் அல்லாஹ்.

“விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப் பட்டிருந்தது போன்றே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப் பட்டிருக்கின்றது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.”

எனவே, ஒரு மாத நோன்பு கட்டாயக் கடமை. அதை நிறைவேற்றுவோர் தூயோர் ஆகின்றனர் என்பதை இறை வசனத்திலிருந்து உணர்ந்து உறுதி பெறுகிறோம். ரமலான் மாதம் சிறப்புமிக்கது என்பதையும் திருமறை எடுத்துரைக்கிறது.

“ரமலான் மாதம் எத்தகைய மகத்துவ முடையது என்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (என்னும் இவ்வேதம்) அருளப்பட்டது. ஆகவே, உங்களில் எவன் அம்மாதத்தை அடைகிறானோ அவன், அதில் நோன்பு நோற்கவும்...” (பகரா:165 )

ரமலான் நோன்பு கட்டாயக் கடமை என்றாலும் விதிவிலக்குகளையும் வகுத்துத் தந்திருக்கிறான் இறைவன். “...அக்காலத்தில் உங்களில் யாராகிலும் நோயாளியாகவோ, அல்லது யாத்திரையிலோ இருந்தால் ரமலான் அல்லாத மற்ற நாட்களில் விட்டுப்போன நாட்களின் நோன்பைக் கணக்கிட்டு நோற்றுவிடவும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவான கட்டளையைக் கொடுக்க விரும்புகிறானே தவிர, உங்களுக்குக் கஷ்டத்தை விரும்பவில்லை. தவிர, தவறிய நாட்களைக் கணக்கிடும்படி கட்டளையிட்டதெல்லாம், உங்கள் மீது கடமையாக உள்ள ஒரு மாத நோன்பின் எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்து, அல்லாஹ் உங்களை நேரான பாதையில் நடத்தியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் நோய், யாத்திரை போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதியளித்ததெல்லாம் நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே!” விதிவிலக்கு விவரங்களை இறைவசனம் தெளிவு படுத்துகிறது. திட்டமான நோன்பின் சட்ட வரம்புகளை மற்ற சில வசனங்களும் எடுத்துரைப்பதை அறிவோம்.

மனிதர்களை தூயவர்களாக்குவதற்கு இறைவன் விதித்த கடமையும் பரிசுமே புனித ரமலான் நோன்பு. அதன் அளப்பரிய பலன்களை அண்ணல் நபி(ஸல்) அழகுற விளக்கியிருக்கிறார்கள்.

“நோன்பு என்பது தனக்குரியது, எனவே அதற்குரிய பலனை தானே அளிப்பேன் என்று பொறுப்பேற்றுக் கொள்வதாக அல்லாஹ் மொழிந்தான் என பெருமானார்(ஸல்) கூறுகிறார்கள். நோன்பாளிக்குக் கிடைக்கும் கூலி அளவற்றது, அவர்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி எப்படிப்பட்டது என்பதையும் அண்ணலார் விளக்கியுள்ளார்கள்.

ரமலான் மாதம் வந்துவிட்டால் சுவனபதியின் வாசல்கள் திறக்கப்பட்டு விடுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விடுகின்றன. ஷைத்தான்களுக்கு விலங்கிடப்பட்டு விடுகிறது என்பது நபிமொழி.

நன்மைகளை அள்ளிக் கொள்ள மக்களுக்கு அல்லாஹ் அளித்த கடமையே நோன்பு. அதற்கென அவன் அருளிய மாதமே ரமலான்.

நோன்பை விதித்தது பொதுக்கருணை;
நோய்களனைத்தும் அகன்றோட
நோன்பை நோற்றிடும் நல்வாய்ப்பை
நல்குவ துன்றன் தனிக்கருணை

இறைவனின் கருணையைப் போற்றும் கவிதை வரிகள் இவை.

தீமைகளைப் போக்குகிறது நோன்பு. களங்கத்தை நீக்கி மனிதரைப் புனிதராக்குகிறது நோன்பு. இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தருகிறது நோன்பு.

ரமலானில் நோன்பிருங்கள் எனும் நபிமணியின் கட்டளையைப் போற்றுவோம். மாண்புமிகு ரமலானை வரவேற்போம். நோன்பு நோற்போம்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



16 Indian Muslim Organisations under FIM celebrated National Day on 2 Aug 2009




Jamiyah's President, Hj Abu Bakar Maidin, being honoured at FIM's National Day Event



Cheque presentation by Chief Minister of Malacca to Masjid Omar Kg Melaka and Masjid Hang Jebat



Visit by IDB President to Singapore Islamic Hub (SIH) on 7 May 2009



MUIS move to Singapore Islamic Hub (SIH) on 10 Apr 2009



MUIS 1st day of operation at Singapore Islamic Hub (SIH) on 11 Apr 2009



Public official re-opening of Abdul Razak Mosque



Visit by Vietnam Government Committee for Religious Affairs to Harmony Center on 29 May 2009

# நற்பணிச் செல்வர் மவ்லவி M.H. பாபு சாஹிப்

பிராடல் சாலையில் புதுப்பிக்கப்பட்ட முயிஸ் அலுவலகத்தின் பல அறைகளுக்கு முன்னோடிகளாக விளங்கியவர்களை நினைவு கூரும் வகையில் பெயர் சூட்டப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பாபு சாஹிப் நினைவறை.

சிங்கப்பூரில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நற்பணியாற்றிய அவரை மூத்த தலைமுறையினர் அறிவர்.

மவ்லவி M.H. பாபு சாஹிப் தமிழ்நாட்டின் நாகர்கோவில்-கோட்டாறு நகரில் 1929-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் மவ்லவி முஹம்மது ஹஸ்புல்லா சாஹிப்-ஆயிஷா தமீனா தம்பதியர். மார்க்க ஆன்மீகப் பாரம்பரியமுள்ள குடும்பத்தை சேர்ந்தவர்கள். பாபு சாஹிபின் தந்தையார் அரசாங்கப் பள்ளியில் அரபு மொழி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பாபு சாஹிப் உயர்நிலைப் பள்ளி வரை தமிழிலேயே கற்றார். ஓரளவு ஆங்கிலமும் கற்றுக்கொண்ட அவர் ஏழு வயதிலேயே திருக்குர்ஆனை ஓதி முடித்தார். உயர்நிலைப்பள்ளிக் கல்விக்குப் பிறகு, 1947-ல் பாபு சாஹிப் சிங்கப்பூருக்கு வந்தார்.

வர்த்தகம் புரிந்துவந்த உறவினர்களுக்கு உதவிபுரிய இங்கு வந்த அவர், ஒரு தனியார் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்தார். காலனித்துவ ஆட்சிக் காலமாக இருந்ததால் சமயக் கல்விக்கு போதிய வாய்ப்பு இல்லை. ஜாமியா சங்கத்தைத் தோற்றுவித்த மீரட் மவுலானா முஹம்மது அப்துல் அலீம் சித்திக்கியின் உரை பாபு சாஹிபுக்கு புதிய திருப்பத்தை உருவாக்கித் தந்தது. இஸ்லாம் மற்றும் ஆன்மீகம், வரலாறு குறித்த நூல்களை தேடிப்பிடித்து படிக்கத் தொடங்கினார். நேரடியாக மார்க்கக் கல்வியைக் கற்பதால் பயனடையலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

பாபு சாஹிப் 1957ல் கேம்பிரிட்ஜ் பள்ளிக் கல்விச் சான்றிதழ் தேர்வை முடித்துவிட்டு மார்க்கக் கல்வி பயில்வதற்காக தமிழகத்திற்குச் சென்றார். நீடூர் மதரஸா மிஸ்பாஹுல் ஹுதா அரபிக் கல்லூரியில் சேர்ந்தார். அதற்குப் பிறகு மதரஸத்துார் ரஹ்மானியாவில் பயின்றார். 1962ஆம் ஆண்டில் ரஹ்மானியா கல்லூரியின் ஆலிம் கல்விச் சான்றிதழைப் பெற்றார்.

தந்தையாரின் விருப்பப்படி 1958ல் திருமணம் புரிந்து கொண்ட பாபு சாஹிப், திருவிதாங்கோடு மதரஸத்துல் இஸ்லாமியா கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து ஈராண்டுகள் மார்க்கக் கல்வி போதித்தார்.



சமய, தத்துவ ஆய்வுக் கண்ணோட்டத்தில் அரபு, ஆங்கில நூல்களை பெரும் எண்ணிக்கையில் படித்து அவற்றைக் கற்பித்து வந்தார்.

தமிழகத்திலிருந்து 1964ல் சிங்கப்பூருக்குத் திரும்பிய பாபு சாஹிப் உறவினர்களின் வர்த்தகப் பணியில் ஈடுபட்டார். ஓய்வு நேரத்தில் ஜாமியா சிங்கப்பூர் நற்பணிகளில் ஈடுபட்டார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மார்க்க நன்னெறிகளை அவர் போதித்து வந்ததுடன், பல விவாத அரங்குகளிலும் பங்கேற்றார்.

பாபு சாஹிப், இஸ்லாத்தைத் தழுவியவர்களின் நல்லிணக்கப் பிணைப்பில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அதன் விளைவாக 1972ல் கும்புலான் சவுடாரா பாரு (புதிய முஸ்லிம் சகோதரர்கள் சங்கம்), முயிஸ் ஆதரவுடன் மதரஸா அல்-சகாஃப் வளாகத்தில் அமைக்கப்பட்டது. அதுவே 1976ல் சிங்கப்பூர் முஸ்லிம் மதம் தழுவியோர் சங்கமாக (தாருல் அர்க்கம்) பெயர் மாற்றம் பெற்றது. சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் 1968ல் தொடங்கப்பட்ட மறுஆண்டில் பாபு சாஹிப் ஷரியா மேல்முறையீட்டு விசாரணைக் கழக செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1970ல் முயிஸ் நிர்வாக மன்ற உறுப்பினரான அவர், 1976 வரை அப்பொறுப்பை வகித்தார்.

## பத்திரிகைப் பணி

பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பையும் பாபு சாஹிப் பெற்றார். அல்-இஸ்லாம் காலாண்டு இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. சிங்கப்பூருக்கான சவூதி அரேபியத் தூதரக அதிகாரியாக இருந்து வந்த டத்தோ சையது இப்ராஹிம் பின் உமர் அல் சஹாப் கேட்டுக் கொண்டதால் 1971 முதல் 1978 வரை அந்த இதழை பாபு சாஹிப் நடத்தினார்.

இதற்கிடையே அவர் 1975ல் இஸ்லாமிய ஆய்வுப் பள்ளியைத் தொடங்கினார். அதில் பயின்ற சில மாணவர்கள் பிரிட்டன் அல்லது அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் முனைவர் பட்டம் பெற்றனர்.

சிங்கப்பூரின் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதிக்கும் வகையில் மவ்லவி பாபு சாஹிப் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற அனைத்து சமூக, சமய கலந்துரையாடல்களிலும், மாநாடுகளிலும் பங்கேற்று சாதனை புரிந்தார். நாற்பது ஆண்டு காலம் தொய்வில்லாமல் தொண்டாற்றிய அவர், சிங்கப்பூர் அனைத்து சமய அமைப்பின் (IRO) செல்வாக்கு மிக்க உறுப்பினராக விளங்கினார்.

## சிறப்பு விருதுகள்

முஸ்லிம்களுக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கும் அவர் ஆற்றிய நற்சேவைக்குரிய ஓர் அங்கீகாரமாக கராச்சியை தலைமையகமாகக் கொண்ட முதம்மார் அல்-ஆலம் அல்-இஸ்லாமி அமைப்பு அதன் சிங்கப்பூர் செயலாளராக அவரை நியமித்தது. பாகிஸ்தான் அரசாங்கம் அல்லாமா சர் முகம்மது இக்பால் நூற்றாண்டு விழா பதக்க விருதையும் பாபு சாஹிபுக்கு அளித்தது. பாகிஸ்தானின் முன்னைய அதிபர் ஜெனரல் ஜியாவுல் ஹக் அதனை வழங்கினார். சிங்கப்பூர் முஸ்லிம்களுக்கு சுமார் 35 ஆண்டு காலம் அவர் ஆற்றிய சேவைக்குரிய அங்கீகாரமாக முஸ்லிம் சமய மன்றத்தின் மெச்சத்தக்க சேவைப் பதக்கத்தை முன்னைய அதிபர் ஒங் ட்டெங் சியோங் 1994ஆம் ஆண்டில் வழங்கினார்.

யயாஸான் மெண்டாக்கியின் உருவாக்கத்திற்கு ஆலோசனை வழங்கி தூண்டுகோலாக அமைந்தார். அதையடுத்து மவ்லவி பாபு சாஹிப், சிங்கப்பூர் முஸ்லிம் நிபுணத்துவத் தொழிலர் சங்கத்தின் (AMP) ஆலோசகராக நியமிக்கப்பட்டார். சிங்கப்பூரில் இஸ்லாமிய அறிஞர்களின் வலுவான அமைப்பு இயங்குவது அவசியம் என்பதில் அவர் அதிக கவனம் செலுத்தினார். வட்டார ரீதியிலும், உலக அளவிலும் இஸ்லாமிய நற்பணிகள் விரிவடைய வேண்டும் என்பதே அவருடைய இலக்காக அமைந்தது.

பாபு சாஹிப் சிங்கப்பூரின் அனைத்து முஸ்லிம் அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு ஆலோசனைச் சேவைகளை வழங்கி வந்தார். அரசியல் போன்ற துறைகளில் முஸ்லிம்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் மார்க்க நெறிமுறைகளில் பேதங்கள் இருக்கக் கூடாது என்பதில் உறுதி மிக்கவராக இருந்து வந்தார் மவ்லவி பாபு சாஹிப்.

அரசியல் ஆர்வமுள்ள தமது மாணவர்களை ஊக்கப்படுத்தி சிங்கப்பூரின் நலனுக்குப் பங்காற்றும்படி ஆற்றுப்படுத்தினார்.

இஸ்லாமிய ஆய்விலும் நற்பணியிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, பன்னாட்டு அங்கீகாரத்தையும் சிறப்புகளையும் குவித்த மவ்லவி பாபு சாஹிபுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் தேசிய பல்கலைக் கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 72 வயதில், 4 டிசம்பர் 2001 (18 ரமலான் 1422) அன்று துணைவியார் பீவி பாத்திமா, இரு புதல்வர்கள், ஒரு புதல்வி ஆகியோரைப் பிரிந்து இறை நாட்டப்படி இவ்வுலகைத் துறந்தார்.

- ஜே.எம்.சாலி

## முன்னோடிகளை நினைவுகூரும் முயிஸ் அறைகள், அரங்குகள்!

சிங்கப்பூரில் சன்மார்க்க, சமூக நற்பணியாற்றிய முன்னோடிகளின் நினைவாக முயிஸ் தலைமையகத்தின் பல அறைகளுக்கும் நிகழ்ச்சி அரங்குகளுக்கும் அவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பலதுறை அறிஞர்கள், மேதைகள், ஞானிகள் அவர்களில் அடங்குவர்.

சிங்கப்பூர் அறிஞர்கள்:
பேராசிரியர் அஹமது இப்ராஹீம்
ஷேக் உமர் அல்கதீப்
மவ்லவி M.H.பாபு சாஹிப்
சையது அப்துல்லா அல் ஜுஃப்ரி
சையது அஹமது சமாயித்
சையது ஜுஹ்ரி முத்தமிம்
எம். ஜே. நமாஜி

வெளிநாட்டு அறிஞர்கள்:
பாக் ஹம்கா
சையது ஹுசேன் அல் அத்தாஸ்
பஸ்லுர் ரஹ்மான்
இஸ்மாயில் ஃபரூக்கி

மற்ற முன்னோடிகள்:
இப்னு ரஷீத்,
இப்னு ஸீனா
அல் மவார்தி
அல் ஃபராபி
இப்னு கல்துன்

இவர்களின் பலதுறை நற்பணிகளை அறைகளும் அரங்குகளும் நினைவுபடுத்துகின்றன.

# சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் சங்க குடும்ப தினம்

குதூகலமான குடும்ப தின நிகழ்ச்சியைக் கொண்டாடியது, தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம். பாசிர் ரிஸ் கடற்கரை கடந்த 7.6.2009 அன்று விழாக் கோலம் பூண்டது. ஆண்களும் மகளிரும் பிரமுகர்களும் விருந்தினர்களும் அணி திரண்டனர். பயன்மிக்க, சுவை மிக்க பல அங்கங்கள் அடுத்தடுத்து இடம் பெற்றன.

நோயுற்றவர்களுக்கு எத்தகைய முதலுதவிகள் தேவைப்படும், அவற்றை எப்படிச் செயல்படுத்துவது என்பதை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து உடற்பயிற்சி, பந்து விளையாட்டு, கயிறு இழுக்கும் போட்டிகள் நடைபெற்றன.

கடந்த கால கலாசாரத்தைப் பளிச்சிடும் அம்சங்களுக்கும் பஞ்சமில்லை. கொழுக்கட்டை செய்யும் நிகழ்ச்சியில் மாதர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். சங்கச் செயலாளர் P.N. ஹாஜி பக்ருதீன் குடும்ப தினத்தை தென்காசி முஸ்லிம் சங்கம் எதற்காகக் கொண்டாடுகிறது என்பதை, குறிப்பாக அதன் முக்கிய நோக்கங்களை தமது உரையில் விளக்கினார்.

ஜாமியா சிங்கப்பூரின் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் முஹம்மது அஸ்பி அபுபக்கர் மைதீன் மற்றும் உயர் அதிகாரிகள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று சிறப்பித்தனர். சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர், செயலாளர், துணைத் தலைவர் ஆகியோர் குடும்பத்துடன் வருகை தந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றது குறித்து தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத் தலைவர் ஹாஜி T.M. ஷேக் முஹையதீன் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தார். அவருடைய நன்றியுரையைத் தொடர்ந்து மாலை சுமார் ஆறு மணிக்கு குடும்ப தின நிகழ்ச்சி நிறைவு கண்டது.



## அமெரிக்கப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றார் ஹலிமா பிந்தி அஹமது ஷா



ஹலிமா பிந்தி அஹமது ஷா சிங்கப்பூருக்கும் தென்காசி சமூகத்திற்கும் சிறப்பு சேர்த்திருக்கிறார். கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தால் கடல் கடந்த நாடுகளும் பட்டங்களை வழங்கி அங்கீகரிக்கும் என்பதற்கு இவர் எடுத்துக்காட்டு.

ஹலிமா அமெரிக்காவின் பென்சில்வேனியா பிட்ஸ்பர்க்பில் Carnegie Mellon பல்கலைக் கழகத்தில் இரசாயனம் பயின்று வந்தார். பட்டக்கல்வியை நிறைவு செய்த அவருக்கு பல்கலைக் கழகம் BSc ஆனர்ஸ் பட்டத்தை வழங்கியது.

# திருக்குர்ஆன் விரிவுரை வெளியீட்டு விழா

சிங்கப்பூரில் தென்னிந்திய ஜம் இய்யத்துல் உலமா சபையை கடந்த நூற்றாண்டில் நிறுவிய உத்தமபாளையம் மவ்லானா எஸ்.எஸ். முஹம்மது அப்துல்காதிர் பாகவி அவர்களின் சாதனைகளை நினைவுகூரும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது திருமறை விரிவுரை வெளியீட்டு விழா. தமிழ் நாட்டிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பிரபலமாக விளங்கிய பன்மொழி அறிஞரும், பன்னூல் ஆசிரியருமான அவர்கள் அந்நாளில் நற்பணியாற்றிய பென்கூலன் பள்ளிவாசல் வளாகத்தில், *24.5.2009* ஞாயிறு இரவு மக்ரிப் தொழுகையுடன் தஃப்ஸீருல் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன் மஜீத் வெளியிடப்பட்டது.

மவ்லானா எஸ்.எஸ்.எம். அப்துல்காதிர் பாகவி அவர்கள் *1937* முதல் *1961* வரை திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டார். ஏழாயிரம் பக்கங்களில் ஏழு பாகங்களாக அவை வெளிவந்தன. அவர்களின் மறைவுக்குப் பிறகு புதல்வர் மவ்லவி எஸ்.எஸ்.எம். முஹம்மது ஜாபர் ஜமாலி, தந்தைக்கு ஆற்றும் சேவையாகவும், தமிழ் முஸ்லிம்களுக்கான நற்பணியாகவும் அந்தத் தொகுப்புகளை அழகிய கட்டமைப்பில் வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

தப்ஸீர் நெடுகிலும் திருக்குர்ஆனின் ஆழ்ந்த நுட்பங்களையும் உத்திகளையும், வரலாற்றுச் சான்றுகளையும் பாகவி அவர்கள் எடுத்துரைத்துள்ளார். அவர்களின் எளிய, இனிய தமிழ் நடை அனைவரையும் ஈர்க்கத் தக்கது. மலேசிய நாணய மாற்று வணிகர் சங்கத் தலைவர் ஹாஜி முஹம்மது ஷுஐபு வரவேற்புரை நிகழ்த்தினார். தந்தையார் வழியில் பதிப்புப் பணியில் முனைந்துள்ள உத்தமபாளையம் மவ்லவி எஸ்.எஸ்.எம். முஹம்மது ஜாபர் ஜமாலி சிறப்புரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து, ஹாஜி அப்துல் கஃப்பார் திருமறை விரிவுரைத் தொகுதிகளை வெளியிட்டார். மஸ்ஜித் பென்கூலன் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம். ஜலீல் PBM முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

விழாக் குழுவின் சார்பில் ஹாஜி முஹம்மது ரஃபீக் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.



---

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் குடும்ப தின நிகழ்ச்சியில் ஹலிமா பிந்தி அஹமது ஷாவை சிறப்பித்தது.

“என் கல்வி வளர்ச்சிக்கு தாய் தந்தையரே ஆதாரமாக அமைந்தனர். அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்கினால்தான் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தின் அறிவியல் பட்டத்தைப் பெற்றிருக்கிறேன். அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் நான். என்னைப் போன்றே மற்ற மாணவ மாணிவியரும் கல்வியில் சிறக்க வேண்டும். அதுவே எனது வேண்டுகோள்!” என்று கூறினார் ஹலிமா.

சிற்றுரையாக இருந்தாலும் ஹலிமாவின் பேச்சு சிறப்புரையாக அமைந்தது. தென்காசி சமூகத்தில் மருத்துவர்களும், பொறியாளர்களும் உருவாகியுள்ளது குறித்து குடும்ப தின நிகழ்ச்சியில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

# செங்காங் மஸ்ஜித் அல்-மவத்தாஹ்



செங்காங் வட்டாரத்திற்குச் சிறப்பு சேர்க்கிறது புதிய பள்ளிவாசல். புவங்காக் ரயில் நிலையத்திற்கு எதிரில் புதிய வடிவமைப்பு முறையில் கட்டப்பட்டு, பொலிவுடன் விளங்கும் அல்-மவத்தாஹ் பள்ளிவாசல் கடந்த மே 15ஆம் தேதி வெள்ளிக்கிழமை திறப்பு விழா கண்டது. சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்தினர் பெரும் எண்ணிக்கையில், சுமார் 1,500 பேர்-விழாவில் பங்கேற்று ஜும்மா தொழுகையை நிறைவேற்றினர்.

பள்ளிவாசல் வளாகத்தில் சாலைக்கு அருகில் சிறுவர் விளையாட்டுத் திடலும் உள்ளது. 1980களில் கட்டப்பட்ட பள்ளிவாசல்களில் அமைக்கப்பட்டது போன்ற சுற்று வேலி எதுவும் இப்பள்ளி வாசலில் இல்லை.

நமது நாட்டின் முஸ்லிம் இளைய தலைமுறைக்கு ஏற்ற வசதிகளைக் கருத்தில் கொண்டே புதிய பாணியில் இப்பள்ளிவாசல் உருவாக்கப்பட்டுள்ளதாக முயிஸ் பள்ளிவாசல் கொள்கைத் திட்டப் பிரிவின் தலைவர் ஜைனி உஸ்மான் தெரிவித்தார்.

"இது பள்ளிவாசல் மட்டுமல்ல, ஓர் இஸ்லாமிய நிலையமும் ஆகும். சிங்கப்பூர் மலாய்-முஸ்லிம் சமுதாயத்திற்கான முயிஸின் இஸ்லாமிய நற்பணித் திட்டங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கும்" என்று அவர் கூறினார்.

அல்-மவத்தாஹ் எனும் அரபுச் சொல் அன்பையும் பாசத்தையும் புலப்படுத்துவது என்பதை அறிவோம். நமது மலாய்-முஸ்லிம் குடும்பங்களை, குறிப்பாக இளைய தலைமுறையினரை அன்புடனும் நேச பாசத்துடனும் ஒருங்கிணைப்பது அல்-மவத்தாஹ் பள்ளிவாசலின் இலட்சியம்.

குடும்பமாகச் சேர்ந்து தொழக்கூடிய தொழுகை அறை, கணினி வசதிகளைக் கொண்ட இளையர் செயல் முனையம், வகுப்பறைகள், கீழ்த்தளத்தில் பாரம்பரிய பிரார்த்தனைகளுக்குரிய அரங்கு முதலான வசதிகள் இப்பள்ளிவாசலில் உள்ளன.

மஸ்ஜித் அல்-மவத்தாஹ் புவங்காக் எம்ஆர்டி ரயில் நிலையத்திற்கு அருகில் கம்பாஸ்வேல் போ-செங்காங் ஈஸ்ட் சாலை முனையில் அமைந்துள்ளதால் மக்கள் எளிதாகச் சென்றடையலாம்.

சுமார் 13 டென்னிஸ் விளையாட்டுத் திடல்களுக்குத் தேவையான 3,500 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 10.5 மில்லியன் வெள்ளி செலவில் இப்பள்ளிவாசல் நிறுவப்பட்டுள்ளது, முயிஸ் பள்ளிவாசல் கட்டுமான நிதியம் அதற்கான தொகையை வழங்கியது.

திறப்பு விழாவைத் தொடர்ந்து மறுநாள் மாலை மணி 4.30 முதல் இஸ்லாமிய சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளிவாசல் ஒரு விளைநிலம் எனும் தலைப்பில் பென்கூலன் பள்ளி வாசல் இமாம் மவ்லவி அப்துல் கையூம் பாகவியும், தொழுகை உண்டாக்கும் பயன்பாடுகள் என்ற தலைப்பில் சூலியா பள்ளிவாசல் இமாம் மவ்லவி முகம்மது யூசுப் காசிமியும் உரையாற்றினர். குடும்பங்களை வரவேற்கும் நிகழ்ச்சியும் வார இறுதியில் நடைபெற்றது.

அல்-மவத்தாஹ் பள்ளிவாசல் நிர்வாகக் குழு, இஸ்லாமியத் தமிழ்ச் சமூக நலனுக்காக நற்பணிகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இளையர்களை பெரும் எண்ணிக்கையில் ஈர்ப்பது அதன் இலக்கு. முயிஸ் ஆதரவுடன் தமிழ் மதரஸா தொடங்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் மதரஸாவை நடத்த ஆர்வம் கொண்டிருக்கிறது.